# காக்னிசன்ட் சாப்ட்வேர் தொழில்நுட்பத்தில் சோழமண்டலம் வாகன கடன்: ஆன்லைன், செல்போன் மூலம் வாங்கலாம்

சென்னை, மார்ச். 12–

முருகப்பா குரூப் அங்கமான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் பைனான்ஸ் நிறுவனத்துக்கு வாகன கடன் வழங்கும் திட்டத்தில் கடன் வழங்குவது முதல் மார்க்கெட்டிங், கடன் வசூல் போன்ற அனைத்து பணிகளையும் காக்னிசன்ட் சாப்ட்வேர் நிறுவனம் டிஜிடல் மயமாக்கி உள்ளது.

இத்துடன் டேப்ளட் கம்ப்யூட்டர், செல்போன், இன்டர்நெட் போன்ற வசதிகளிலும் இதை செயல்படுத்தி உள்ளது. இதன் மூலம் சோழமண்டலம் விரைவாக செயல்படும். செலவு சிக்கனமாகும். வாடிக்கையாளருக்கு கூடுதல் வசதிகள் கிடைக்கும் என்று இதன் நிர்வாக இயக்குநர் வெள்ளையன் சுப்பையா தெரிவித்தார்.

செல்போன் மூலம் இந்த வசதி வழங்க காக்னிசன்ட் சாப்ட்வேர் வழங்கி உள்ளது.

நிதித்துறை தேவை வேகமாக மாறி வருகிறது. அதற்கேற்ற நவீன வசதிகளை சோழமண்டலம் அமல்படுத்தி வருகிறது. காக்னிசன்ட் கூட்டுடன் இதை வெற்றிகரமாக செயல்படுத்தி உள்ளது என்றார் வெள்ளையன் சுப்பையா.

காக்னிசன்ட் துணைத் தலைவர் சவுரி எஸ்.கிருஷ்ணன் பேசுகையில், சோழமண்டலம் இனி நேரடியாக வாடிக்கையாளருக்கு ஆன்லைன், செல்போன், டேப்லட் மூலம் வாகன கடன் திட்டங்களை உடனுக்குடன் வழங்கலாம் என்றார்.